**ஜனவரி – 16**

# TNPSC துளிகள்

- கல்வி நிறுவன வளாகங்களுக்கு வருகை தரும் அனைத்துப் பார்வையாளர்களையும் கண்காணிக்கவும், நிகழ்நேரக் கண்காணிப்பு அமைப்புகளை நிறுவவும் மற்றும் பார்வையாளர்களின் மேலாண்மை நடைமுறையினை உருவாக்குவதற்குமான புதிய வழிகாட்டுதல்களை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.
- சேலம் மாவட்டத்தில் உள்ள தலைவாசலில் அமைக்கப்பட்டுள்ள கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிறுவனத்தினை முதலமைச்சர் திறந்து வைத்தார்.
- இந்த ஆண்டு காவல்துறையின் இரண்டாம் நிலைக் காவலர்கள், முதல் நிலைக் காவலர்கள், தலைமைக் காவலர்கள் மற்றும் காவல் துறையின் சிறப்பு துணை ஆய்வாளர்கள் பதவி நிலையில் உள்ள மொத்தம் 3,000 காவல்துறையினர், தமிழ்நாடு முதலமைச்சர் காவலர் பதக்கங்களைப் பெற உள்ளனர்.
- தேவஜித் சைகியா மற்றும் பிரப்தேஜ் சிங் பாட்டியா ஆகியோர் முறையே இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாடு வாரியத்தின் (BCCI) செயலாளராகவும் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.

# தமிழ்நாடு செய்திகள்

## ஆளுநர் விருதுகள் 2024

| Categories | Institution | Individual |
|---|---|---|
| Social Service | Idhayangal (Coimbatore District)<br><br>Hope Public Charitable Trust (Chennai District) | Thiru. S.Ramalingam (Chennai District)<br><br>Tmt. Swarnalatha J (Coimbatore District)<br><br>Thiru. A.Rajkumar (Madurai District) |
| Environmental Protection | Chitlapakkam Rising Charitable Trust (Chennai District) | --- |

- 'சமூக சேவை' மற்றும் 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' பிரிவுகளின் கீழ் 2024 ஆம் ஆண்டின் ஆளுநர் விருதுகளைப் பெற உள்ள நபர்களின் பெயர்களைத் தமிழ்நாடு ஆளுநர் மாளிகை அறிவித்துள்ளது.
- இதயங்கள் (கோயம்புத்தூர் மாவட்டம்) மற்றும் ஹோப் பப்ளிக் சாரிட்டபிள் டிரஸ்ட் (சென்னை மாவட்டம்) ஆகியவை நிறுவனங்களுக்கான 'சமூக சேவை' பிரிவில் இந்த விருதிற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.
- S. இராமலிங்கம் (சென்னை மாவட்டம்), J.ஸ்வர்ணலதா (கோயம்புத்தூர் மாவட்டம்), மற்றும் A. ராஜ்குமார் (மதுரை மாவட்டம்) ஆகியோர் இந்தப் பிரிவில் தனி நபர்களுக்கு ஆன விருதைப் பெற உள்ளனர்.

- சிட்லபாக்கம் ரைசிங் சாரிட்டபிள் டிரஸ்ட் (சென்னை மாவட்டம்) நிறுவனங்களுக்கான 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' பிரிவின் கீழ் இந்த விருதைப் பெற உள்ளது.

## 2024 ஆம் ஆண்டில் இணைய வெளி மோசடிகள்




- இணைய வெளி மோசடியினால் இழந்த மொத்தம் 771.98 கோடி ரூபாயை தமிழ்நாடு காவல்துறையின் இணையவெளிக் குற்றப்பிரிவு முடக்கியுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் இணையவெளிக் குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 83.34 கோடி ரூபாய்த் தொகையினையும் அத்துறை திருப்பி அனுப்பியுள்ளது.
- அத்துறையானது 79,449 சமூகச் சேவைப் பதிவேடுகளை (CSR) உருவாக்கி 4,326 முதல் தகவல் அறிக்கைகளை (FIRS) தாக்கல் செய்துள்ளது, இதன் மூலம் மொத்தம் 1,673.85 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

## இந்தியாவில் தயாரிக்கப்பட்ட மடிக்கணினிகள்





- சிர்மா SGS டெக்னாலஜி நிறுவனத்தின் ஒரு அதிநவீன மடிக்கணினி ஒருங்குசேர்ப்பு மையமானது சென்னையில் திறக்கப்பட்டுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது தகவல் தொழில்நுட்ப வன்பொருளுக்கான PLI 2.0 திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- தமிழ்நாட்டில் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின் (MeitY) பல்வேறு திட்டங்களின் கீழ் 47க்கும் மேற்பட்ட உற்பத்தி அலகுகளுக்கு ஆதரவளிக்கப்

படுகின்றன.

- PLI 2.0 என்ற திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட 27 அலகுகளில் ஏழு அலகுகள் தமிழக மாநிலத்தில் அமைந்துள்ளன.
- தமிழ்நாடு இன்றுவரையில் 1.3 லட்சம் கோடி ரூபாய்க்கு மேலான மதிப்பிலான மொத்த உற்பத்தி இலக்கினை அடைந்துள்ளதோடு மேலும் இந்தியாவின் ஏற்றுமதியில் 30% பங்கினைக் கொண்டுள்ளது.


## பரங்கி மலை தொடர்பான சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு




- சென்னையிலுள்ள புனித தோமையார் மலை/ பரங்கி மலையில் உள்ள 25.6 நிலப் பகுதியை கையகப்படுத்துமாறு தமிழக மாநில அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- 1902 ஆம் ஆண்டு முதல் தனியார் ஆக்கிரமிப்பில் இருந்த இந்தப் பொதுச் சொத்தின் மீது உரிமை கோர முயன்ற மூன்று நபர்களுக்கு உயர் நீதிமன்றம் தண்டனையையும் விதித்துள்ளது.
- தேவைப் பட்டால், 1905 ஆம் ஆண்டு தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டத்தை கூட பயன்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## நீதி பெறும் உரிமை குறித்து உச்ச நீதிமன்றத்தின் கருத்து





- நீதி கிடைப்பதை உறுதி செய்யும் உரிமையானது நிபந்தனையற்றது அல்ல என்றும்

அது பொறுப்புடன் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

- மனுதாரர் 11 ஆண்டுகளுக்கும் மேலாக தான் பணியிலிருந்து நீக்கப்பட்டதை எதிர்த்து வழக்குத் தொடுப்பதற்காக, சட்டத் தீர்வு முறைகளை மீண்டும் மீண்டும் தவறாகப் பயன்படுத்தியுள்ளார் என்று நீதிமன்றம் கண்டறிந்தது.
- 2016 ஆம் ஆண்டில், உச்ச நீதிமன்றத்தின் அரசியலமைப்பு அமர்வானது, நீதி கிடைப்பதை உறுதி செய்வது என்பது இந்திய அரசியலமைப்பின் 14 மற்றும் 21 ஆகிய சரத்துகளின் கீழ் குடிமக்களுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்ட ஒரு அடிப்படை உரிமை என்று கூறியது.

## மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் விதிகள் திருத்தம் - 2025

- 1945 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டத்தின் M அட்டவணையின் திருத்தப்பட்டத் தரநிலைகளை அமல்படுத்துவதற்கான தேதியை மத்திய சுகாதார அமைச்சகம் திருத்தி அறிவித்துள்ளது.
- மருந்து உற்பத்தித் துறைகள் இந்த விதிகளுக்கு இணங்குவதற்கு கூடுதலாக என்று 12 மாதங்கள் அவகாசம் அளிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அட்டவணை M என்பது 1945 ஆம் ஆண்டின் மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டத்தின் ஒரு பகுதியாகும் என்பதோடு, இது இந்தியாவில் மருந்துப் பொருட்களுக்கான சீர்தர உற்பத்தி நடைமுறைகளை (GMP) குறிப்பிடுகிறது.
- இது உற்பத்திச் செயல்பாட்டில் பயன்படுத்தப்படும் வளாகங்கள், ஆலைகள் மற்றும் உபகரணங்களுக்கான தேவைகளை உள்ளடக்கியது.
- நாட்டில் சுமார் 10,500 உற்பத்தி அலகுகள் உள்ளன, அவற்றில் சுமார் 8,500 அலகுகள் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்கள் (MSME) என்ற பிரிவின் கீழ் வருகின்றன.





# சர்வதேசச் செய்திகள்

## UN-CEBD உறுப்பினர்


- இந்திய நாடானது அதிகாரப்பூர்வப் புள்ளிவிவரங்களுக்கான பெருந்தரவு மற்றும் தரவு அறிவியல் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழுவில் (UN-CEBD) இணைந்துள்ளது.
- UN-CEBD ஆனது, பெருந்தரவுகளின் நன்மைகள் மற்றும் சவால்கள் குறித்து மேலும்

ஆராய்வதற்காக 2014 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.

- ❖ அதிகாரப்பூர்வ புள்ளிவிவர நோக்கங்களுக்காக வேண்டி பெருந்தரவு மற்றும் தரவு அறிவியலைப் பயன்படுத்துவதில் உலகளாவியத் தரநிலைகள் மற்றும் முக்கிய நடைமுறைகளை வடிவமைப்பதில் இந்தியா பங்களிக்கும்.
- ❖ UN-CEBD ஆனது சுமார் 31 உறுப்பினர் நாடுகளையும் 16 சர்வதேச அமைப்புகளையும் (இந்தியா உட்பட) கொண்டுள்ளது.




## கிரீன்லாந்து - உலகளாவிய முக்கியத்துவம்





- ❖ கிரீன்லாந்து உலகின் மிகப்பெரிய தீவு என்பதோடு மற்றும் புவியியல் ரீதியாக வட அமெரிக்காவின் ஒரு பகுதியாகும்.
- ❖ இந்த ஆர்க்டிக் தீவு ஆனது டென்மார்க் நாட்டின் இரண்டு தன்னாட்சிப் பிரதேசங்களில் ஒன்றாகும் என்ற நிலையில் இதில் மற்றொன்று பரோயே தீவுகள் ஆகும்.

- 2009 ஆம் ஆண்டு முதல், கிரீன்லாந்து அரசானது ஒரு வாக்கெடுப்பு மூலம் சுதந்திரத்தை அறிவிப்பதற்கான உரிமையினைக் கொண்டுள்ளது.
- 80 சதவீதம் பனியால் மூடப்பட்டிருக்கும் இது அமெரிக்க தலைநகரிலிருந்து சுமார் 3,000 கிலோ மீட்டர் (1,864 மைல்) தொலைவில் உள்ளது.
- கிரீன்லாந்தில் சுமார் 56,000 குடியிருப்பாளர்கள் வசிக்கின்றனர் என்ற ஒரு நிலையில் அவர்களில் பெரும்பாலோனோர் இனுயிட் பழங்குடியின மக்கள் ஆவர்.
- ஐரோப்பிய ஆணையத்தினால் "முக்கிய மூலப்பொருட்கள்" என்று கருதப்படும் 34 தாதுக்களில் 25 தாதுக்கள் கிரீன்லாந்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- கிரீன்லாந்து ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பினர் நாடு அல்ல, ஆனால் அது நேட்டோ நாடுகளில் அங்கம் வகிக்கும் பகுதியாகும்.
- கிரீன்லாந்து, ஐஸ்லாந்து மற்றும் ஐக்கியப் பேரரசினை இணைக்கும் கடல் பரப்பில் ரேடார்களை வைப்பதன் மூலம் கிரீன்லாந்தில் தனது ராணுவ இருப்பை மிக நன்கு விரிவுபடுத்துவதில் அமெரிக்கா ஆர்வம் தெரிவித்துள்ளது.
- கிரீன்லாந்து வட அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவிற்குப் பயணிப்பதற்கான குறுகிய தொலைவு கொண்ட பாதையை வழங்குகிறது.
- இது அமெரிக்காவிற்கு அதன் ராணுவம் மற்றும் அதன் முக்கிய உந்துவிசை எறிகணை தாக்குதல்களுக்கான முன்னெச்சரிக்கை அமைப்புக்கு ஒரு முக்கிய உத்தி சார் மேலாதிக்கத்தை அளிக்கக் கூடும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## 2025 ஆம் ஆண்டில் லா நினா நிலைகள்





- பசிபிக் பெருங்கடலில் லா நினா நிலைகள் இறுதியாக வெளிப்பட்டுள்ளன.
- மத்திய மற்றும் கிழக்கு பசிபிக் பெருங்கடலில் கடல் மேற்பரப்பு வெப்பநிலை என்பது சராசரிக்கும் குறைவாக உள்ளது.
- லா நினா என்பது எல் நினோ தெற்கு அலைவு (ENSO) என்று அழைக்கப்படுகிறது.
- மத்திய மற்றும் கிழக்கு வெப்பமண்டல பசிபிக் பெருங்கடலில் கடல் வெப்பநிலையில் ஏற்படும் மாற்றங்களால் வகைப்படுத்தப்படும் இந்தப் பருவநிலை நிகழ்வு ஆனது, வளி மண்டலத்தின் மேல்மட்ட நிலையில் நிலவும் ஏற்ற இறக்கங்களுடன் சேர்ந்து நிகழ்கிறது.

- ENSO ஆனது உலகளாவிய வளிமண்டலச் சுழற்சியில் தாக்கத்தினை ஏற்படுத்தி, அதை மாற்றி யமைத்து மற்றும் அதில் குறுக்கீடுகளை ஏற்படுத்துகிறது, இது உலகளவில் நிலவும் வானிலையில் தாக்கத்தினை ஏற்படுத்துகிறது.
- ENSO ஆனது சூடான பரப்பு (எல் நினோ), குளிர் பரப்பு (லா நினா) மற்றும் நடுநிலை என மூன்று கட்டங்களைக் கொண்டுள்ளது என்பதோடு இவை சுமார் இரண்டு முதல் ஏழு ஆண்டுகள் வரையில் ஒழுங்கற்ற சுழற்சிகளில் நிகழ்கின்றன.
- லா நினா என்ற நிகழ்வானது கடைசியாக 2020-2023 ஆம் ஆண்டிலும், எல் நினோ நிகழ்வானது 2023-24 ஆம் ஆண்டிலும் ஏற்பட்டது.

# மாநிலச் செய்திகள்

## Z-மோர்ஹ் சுரங்கப்பாதை

- பிரதமர் ஜம்மு காஷ்மீரில் அமைக்கப்பட்டுள்ள சோனமார்க் சுரங்கப் பாதை என்றும் அழைக்கப் படும் 6.5 கி.மீ. நீளமுள்ள Z-மோர்ஹ் என்ற சுரங்கப்பாதையைத் திறந்து வைத்தார்.
- அனைத்து வகையிலான வானிலைகளிலும் போக்குவரத்து இணைப்பினை வழங்கும் இந்த சுரங்கப் பாதையானது ஸ்ரீநகருக்கும் சோனமார்க்கிற்கும் இடையிலுள்ள இந்தப் போக்குவரத்து இணைப்பினை மேம்படுத்தும்.
- பல மாதங்களாக கனமழையின்காரணமாக தடை பட்டிருந்த, அடிக்கடிப் பனிச்சரிவு ஏற்படக் கூடிய பாதையின் ஒரு பகுதியைத் தவிர்த்து பயணிக்க இது உதவுகிறது.
- இந்த சுரங்கப் பாதையானது 8,500 அடிக்கு மேலான உயரத்தில் கட்டப்பட்டுள்ளது.




## உட்ரிகுலேரியா – இராஜஸ்தான்

- இராஜஸ்தானின் கியோலாடியோ தேசியப் பூங்காவில் 'உட்ரிகுலேரியா' (சுண்டெலிக் கூண்டு) என்ற அரிய மற்றும் தனித்துவமான ஊனுண்ணித் தாவரம் கண்டறியப் பட்டு உள்ளது.
- இது கடைசியாக இந்தியாவில் சுமார் 36 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு 2021 ஆம் ஆண்டில் உத்தரகாண்ட் மாநிலத்தின் சமோலி மாவட்டத்தின் மண்டல் பள்ளத்தாக்கில் கண்டறியப் பட்டுள்ளது.
- இந்த தாவரம் ஆனது பொதுவாக மேகாலயா மற்றும் டார்ஜிலிங் போன்ற பகுதிகளில் காணப்படுகிறது.

- இந்தத் தாவரங்கள் ஆனது புரோட்டோசோவா, பூச்சிகள், லார்வாக்கள், கொசுக்கள் மற்றும் தலைப்பிரட்டைகள் போன்ற உயிரினங்களைச் சிக்க வைத்து உணவாகக் உட்கொள்கின்றன.



## போடா தியோஹர் திருவிழா




- கிரி பிராந்தியத்தினை ஒட்டியப் பகுதிகளில் வாழும் ஹட்டி பழங்குடியினரின் போடா தியோஹர் திருவிழாக்களின் கொண்டாட்டமானது இமாச்சலப் பிரதேச மாநிலத்தில் நடைபெற்று வருகிறது.
- ஒரு மாத காலம் நடைபெறும் இந்தத் திருவிழாவானது அந்தப் பகுதியில் மாகோ கோ தியோஹர் என்று அழைக்கப்படுகிறது.
- இது மூன்று முக்கிய தனித்துவமான சிறு திருவிழாக்களாகப் பிரிக்கப்படுவதன் மூலம் வேறுபடுத்தப் படுகிறது என்பதோடு அவை ஒவ்வொன்றும் அதன் தனித்துவமானப் பழக்க வழக்கங்கள் மற்றும் சடங்குகளால் குறிக்கப் படுகின்றன.


## மகா கும்ப மேளா 2025

- உலகின் மிகப்பெரிய ஆன்மீக நிகழ்வுகளில் ஒன்றான மகா கும்ப மேளா உத்தரப் பிரதேசத்தின் பிரயாக்ராஜ் நகரில் தொடங்கியது.
- கும்ப மேளாவானது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நான்கு வெவ்வேறு இடங்களில் நடைபெறுகிறது.
- இருப்பினும், பிரயாக்ராஜ் நகரில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே

மகா கும்ப மேளா ஏற்பாடு செய்யப்படுகிறது.

- கூடுதலாக, சுமார் 144 ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே நிகழும் அரிய வானியல் அமைப்புகளின் நேர்க்கோட்டு ஒருங்கிணைவு காரணமாக 2025 ஆம் ஆண்டு மஹா கும்பமேளா நிகழ்வானது சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.
- 2017 ஆம் ஆண்டில், கும்பமேளா நிகழ்வானது யுனெஸ்கோ அமைப்பினால் இந்திய நாட்டின் 'தொட்டுணர முடியாத கலாச்சாரப் பாரம்பரியம்' ஆக அறிவிக்கப்பட்டது.




## மொட்டை மாடிச் சுற்றுலா



- பழைய அகமதாபாத் நகரில் மொட்டை மாடி வாடகை என்ற கருத்தாக்கம் ஆனது சில ஆண்டுகளாக நடைமுறையில் உள்ளது.
- உத்தராயண (மகர சங்கராந்தி) பண்டிகையின் போது இந்தப் பகுதி மொட்டை மாடிச் சுற்றுலாவின் மையமாக மாறியுள்ளது.
- இது சுற்றுலாப் பயணிகளுக்குப் பட்டம் பறக்கவிடுதல் மற்றும் பிற இதர சுற்றுலாச் செயல்பாடுகளுக்கானப் பிரத்தியேக இடங்களை வழங்குவதற்காக குடியிருப்புகளின்

மொட்டை மாடிகளை வாடகைக்கு விடும் நடைமுறையினைக் குறிக்கிறது.

# முக்கிய தினங்கள்

## உலக தர்க்க தினம் - ஜனவரி 14

- இது அறிவுசார் வரலாறு, கருத்தியல் முக்கியத்துவம் மற்றும் தர்க்கத்தின் நடைமுறை தாக்கங்களை பல்துறை அறிவியல் சமூகங்கள் மற்றும் பொதுமக்களின் கவனத்திற்கு கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் தேதியன்று, யுனெஸ்கோ அமைப்பின் 40வது பொது மாநாடு ஆனது இந்த நாளை அறிவித்தது.
- இந்தத் தேதியானது கர்ட் கோடலின் நினைவு தினத்துடனும் ஆல்ஃபிரட் டார்ஸ்கியின் பிறந்த தினத்துடனும் ஒன்றி வருகிறது.
- அவர்கள் இருவரும் இருபதாம் நூற்றாண்டின் மிக முக்கியமான தர்க்கவியலாளர்கள் ஆவர்.




# இதரச் செய்திகள்

## கூடங்குளத்திற்குப் புதிய அணு உலைகள்



- கூடங்குளம் அணுமின் நிலையத்தின் ஆறாவது மின் அலகுக்கான VVER-1000 என்ற உலையானது அந்த நிலையத்திற்குக் கொண்டு செல்லப் படுகிறது.
- தற்போது ரஷ்ய வடிவமைப்பின் படி கூடங்குளம் அணுமின் நிலையத்தில் நான்கு புதிய

மின் அலகுகள் கட்டமைக்கப்பட்டு வருகின்றன.

- தற்போது முறையே 2013 மற்றும் 2016 ஆகிய ஆண்டிலிருந்து இதே போன்ற திறன்கள் கொண்ட இரண்டு அலகுகளில் மின்சாரம் உற்பத்தி செய்ய ப்பட்டு வருகின்றன.
- ரஷ்யாவின் ரோசட்டம் ஸ்டேட் கார்பரேஷன் நிறுவனமானது, KKNPP நிலையத்தின் மின் அலகுகளுக்கு அதன் மொத்த ஆயுள்காலத்திற்கும் எரிபொருளை வழங்குகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★